277

உ



யா/தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி திருவந்தாதி

ஆக்கியோன் :
**அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**

வெளியீடு :
**திரு. சீ. பாலகுமாரன்**
மாத்தனை, தெல்லிப்பழை

குறிப்பு : இந்நூல் விற்பனையால் வரும் நிதி
ஷெ ஆலயத் திருப்பணிக்காகும்.

**1979**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



யா/தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி திருவந்தாதி

ஆக்கியோன் :
அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்

வெளியீடு :
திரு. சி. பாலகுமாரன்
மாத்தனை, தெல்லிப்பழை

குறிப்பு : இந்நூல் விற்பனையால் வரும் நிதி
ஷ ஆலயத் திருப்பணிக்காகும்.

1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

அன்னையாம் துர்க்கை யம்மை யருள்வரு திருவந் தாதி
முன்னிய முப்பத் தாறும், முதல்வியாம் அன்னுள் பாதஞ்
சென்னிவைத் திறைஞ்சிநின்று செப்பினேன், சிறந்த தொண்டர்
உன்னிநெஞ் சுருகி ஓதி ஒளிநலம் பெறுவ ரென்றே.

அளவெட்டி
10–12–79

ஆக்கியோன் :
சி. வி.

பதிப்புரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொல்லையூ முகலும் வாழ்வின் சுதந்திரம் மலரும் வல்ல
கல்லைநேர் நெஞ்சு நெக்கிக் கனிந்துசர்க் கரையு மாகும்
முல்லைநேர் நகைபு ரிந்து முகமதி காட்டி யிர்க்கும்
தெல்லியூர்த் துர்க்கை யம்மை திருவிழி நோக்கி னலே.

—சீ. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஸ்ரீ த்வாரகா சாரதாபீட ஆஸ்தான ஸ்தபதி,
அரசு அங்கீகாரம்பெற்ற ஸ்தபதி
**சிற்பி எஸ். தேவலிங்கம் அவர்கள்**
வழங்கிய

# அணிந்துரை

இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி, பாரதமெங்கும் பேரிகை கொட்டி, சாக்தம் என்ற பெயரில் சக்தி வழிபாட்டினைப் போதித்தவர் ஆதி சங்கரர். இதன் முன்னரே ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர், தங்கோன், போதிப்பிரமன், புராரி, முராரி, பொதிகை முனி, கந்தன், கணபதி, காமன் முதல் சாதித்த புண்ணியர் எண்ணிலர் என்று தமிழில் அந்தாதி வழங்கிய அபிராமிப் பட்டர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆட்சி, ஆளடிமை, மக்கள், சுற்றம், மண், பெண், மணி, வாகனம் என்ற அஷ்ட ஐசுவரியத்தையும் தரவல்லது ப்ராம்ஹீ, மஹேஸ்வரி, கௌமாரீ, வைஷ்ணவி, வராஹீ, மஹேந்த்ரீ, சாமுண்டீ, மகாலக்ஷ்மி என்ற அஷ்ட சக்திகளே ஆகும். இந்த அஷ்ட சக்திகளின் ஆதாரங்களை ஒருங்கே இணைத்துத் தனதாக்கிக் கொண்டவளே அன்னை துர்க்காதேவி. ஒன்பது என்ற இலக்கத்திற்கு மேல் எப்படி இலக்கம் இல்லையோ அப்படி துர்க்கை என்ற சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி பிறிதொன்றுமில்லை. ஒன்பது என்ற இலக்கம் தனக்குச் சமமான இலக்கங்களைத் தன்னுள் சேர்த்துக்கொள்ளும். தன்னிலும் தாழ்ந்த இலக்கங்களைத் தன்னின்று அகற்றி விடும். உதாரணமாக, $9 \times 2 = 18$ : $8 + 1 = 9$, $9 \times 3 = 27$ : $7 + 2 = 9$. இப்படி எத்தனை இலக்கங்களால் பெருக்கினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தொகை ஒன்பதாகவே வருவதைக் காண்கிறோம். தன்னிலும் தாழ்ந்த 8 என்ற இலக்கத்தை ஒன்பதுடன் சேர்ப்பின் 17 ஆகிறது. 7 + 1 = 8 ஆகிவிடும். தன்னுடன் சேர்ந்த 8ஐ அகற்றியிருப்பதைத் காண்கிறோம். இப்படி எத்தனை சிறிய இலக்கங்களைச் சேர்க்கினும் அவற்றை விலக்கிவிடும்.

மூன்று வளைவுகளையுடையதே இந்த 9 என்ற இலக்கம். ஒன்பதை இலக்கமாகக் கொண்ட துர்க்காதேவி மூன்று சக்திகளைத் தன்னுள் அடக்கியவளே. இச்சை, கிரியை, ஞானம் அல்லது அழகு, அறிவு, ஆற்றல் அல்லது அலை மகள், கலைமகள், மலைமகள் இம் மூன்றும் இணைந்ததே துர்க்கை.

இவ் உலகெங்கும் 51 தலங்களிலே துர்க்காதேவி அருள் பாலிக்கிறாள். இவற்றுள் 51ஆவது தலமாகிய தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கையை வழிபட்டு வந்த அன்பர், சாக்தர், நமது அளவெட்டி நண்பர், புலவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் நினைந்து, அன்பே நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து, அருளமுதம் உட்கொண்டு வணைந்து, இத் தெல்லிப்பழை அன்னை துர்க்கையின்மீது புனைந்தேற்றியது இந்தத் துர்க்கை அந்தாதி ஆகும். 36 தத்துவங்களுக்கும் 36 பாடல்கள் இயற்றி அந்தாதியாக வழங்கியதை அருள்மிகு துர்க்கை அன்னையின் அடியார்களில் தலைசிறந்த ஒருவரான அன்பர் திரு. சீ. பாலகுமாரன் அவர்கள் இதை அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த அந்தாதியினை 11-11-79 அன்று இரவு பிரணவ கணபதியின் முன் இவ்வந்தாதியின் ஆசிரியரான புலவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர் கள் இவ்வாலய நிர்வாகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் செவிமடுக்க அரங்கேற்றும்போது அடியேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து செவியுறும் பேற்றினைப் பெற்றேன். புல்லரித்தது. மெய்சிலிர்த்தது. என்னே இறைவியின் செயல்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவ்வந்தாதியினை நாள் தோறும் அல்லது பிரதி செவ்வாய், காலை மாலை அல்லது ஞாயிறு உச்சி வேளைகளில் 45 வாரங்கள் தொடர்ந்து படிப்பின் புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்ற 16 பேறுகளையும் நீங்கள் முப்பிறவிகளுக்கும் பெற்று உய்வீர்கள் என்பது உறுதி. வாயாரப் பாடும் தொண்டர் இனத்தாருள் நானும் கலந்துகொண்டு இப்படி ஒரு அணிந்துரை வழங்க வாய்ப்பினைப் பெற்றமைக்கு அன்னை துர்க்காதேவியை வணங்குகிறேன்.

நன்றி.

சிற்பி எஸ். தேவலிங்கம்,

ஸ்ரீ துர்க்கைஅம்மன் ஆலயம்,
தெல்லிப்பழை.
*13-11-79.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி

## தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# பாராட்டுரை

சமீபத்திலே துர்க்காதேவி மேல் பாடப்பட்ட அருட் பாடல்கள் அனைத்தையும் யாத்த பெருமை அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களையே சாரும். அவர்கள் அம்பாள் உபாசகர்; அடியார்களைத் துர்க்கை அம்பாள் பால் ஆற்றுப்படுத்துபவர்; இயற்கையாகவே கவிபாடும் வன்மை பெற்றவர். தெய்வக் கலையும், திருமுகப் பொலிவும் பெற்ற இப் பெரியார் துர்க்கை அந்தாதி முப்பத்தாறு பாடல்களில் பாடி நிறைவுசெய்துள்ளார். அந்தாதி என்றால் நூறு பாடல்களைக் கொண்டு அமையவேண்டும் என்பது விதி. எனினும் நாளும் கோளும் — மொத்தம் 36. அதற்குப் பொருந்தவே 36 பாடல்களில் இந்நூலை முடித்துள்ளார். இவருடைய இவ்வரிய அருட் படைப்பை அச்சிட்டு உதவ முன்வந்துள்ளார் இவ்வூர் அன்பர் சீ. பாலகுமாரன் அவர்கள். இவ்விளைஞர் துர்க்காதேவியிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்து வாழ்பவர். இவரது குடும்பம் அம்பாள் அருள்பெற்ற பக்திக் குடும்பம். எனவே, இப்பணி இவருக்கு இயல்பாக அமைந்ததே எனலாம். அதுவுமன்றி இந்நூல் அம்பாள் அடியார்களுக்குச் சிறந்த பாராயண நூலாக அமையும் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு. அருட்கவி அவர்களை இந்நேரத்தில் பாராட்டுவதுடன் அன்பர் சீ. பாலகுமாரன் அவர்களையும் வாழ்த்தி அன்னையின் திருவருளைப் போற்றி அமைகின்றேன்.

வணக்கம்

தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## யா/தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி திருவந்தாதி

### காப்பு

ஐந்து கரத்தனை ஆனைமுகச்
சுந்தர னைச்சிவ சோதியனை
முந்திய நாதனை மூலமகா
மந்திர னைக்கழல் வாழ்த்துவமே.

## நூல்

சீர்தரு வாரணச் செல்வனைத் தந்த சிவக்கொழுந்தைச்
சூர்தரு வேதனை தீர்த்திடு வேலனைத் தொட்டணைத்துப்
பார்தரு சைவமும் வான்தரு பேறும் படைத்தவளைத்
தேர்தரு தெல்லியூர்த் துர்க்கையைப் போற்றுதும் சிந்தை
வைத்தே.

வைத்தகத் தேத்தும் பழவடி யார்குலம் மாண்புகொளக்
கைத்தலத் தேபொற் கலசமும் கஞ்சமும் கன்னலுங் கொண்
டித்தலத் தேனு மணிநிகர் துர்க்கை யிரட்சகியே
நித்திலம் பூத்த நகைமிகு மண்ட நெடுங்கொடியே.

கொடியே சுருதிக் குயிலே இமவான் குமாரியெனும்
பிடியே சிவமா மயிலே பிரணவம் பேசநின்ற
முடியே முதலே முது பொரு ளேதுர்க்கை மூவடிவே
யடியே னுனையெவ் வடிவினிற் காண்பன் அறைகுதியே.

அறையும் மறைகளும் ஆகம முங்கலை யத்தனையாந்
துறையும் இதிகாச மும்புரா ணங்களும் சொல்லடங்கா
நிறையும் கருணையும் சச்சிதா னந்தமா நீண்முடியிற்
பிறையும் பொலிவுறும் துர்க்கையம் மாவெனும் பேரமுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதென் றடைவார்க் ககத்தினும் வாக்கினும் ஆற்றலினும்
சமுகந் தரவரு சாமளை யேதெல்லித் தண்பதியில்
கமழும் சிவபாரி ஜாதமே துர்க்கைக் களஞ்சியமே
அமய மறிந்திருந் தேற்ற வருள்தரு மம்பிகையே.

அம்பிகை சுந்தரி யானந்த பைரவி யாயதவம்
கம்பையி லாற்றுகா மாட்சி மனோன்மணி கற்பகமா
மெம்பெரு மாட்டியென் றேத்த வருந்துர்க்கை யீஸ்வரியே
கும்பிடும் போதுன் குரைகழற் போதைக் கொடுத்தருளே.

அருளே மயமான வாரணி யேயிவ் வவனியிலே
மருளே பிடித்து மனந்தடு மாறிடு வஞ்சநெஞ்சேன்
பொருளே யுணர்ந்து புகழே புனைந்து பொருந்துகவித்
தெருளே யிசைக்க வரந்தரு வாய்துர்க்கைச் சிற்பரையே.

சிற்பர ஞானத் தெளிவும் தெளிவுற்ற செந்நிலையும்
முற்பவ மூல மறுக்கப் பயின்ற முதிரறிவும்
சொற்பொரு ளாகிச் சுவையாகி யோகத் துணைபுரியும்
அற்புதத் தெல்லிப் பழைத்துர்க்கை யேபர மானந்தமே.

ஆனந்த வல்லி அபிராமி செந்தமி ழாட்சிபொங்கத்
தானந் தொடர்ந்து மதுரை யமர்ந்த தடாதகையே
ஈனந் ததும்பும் தமியேனை யாளுத லென்றுகொலோ
கானந் ததும்பிடும் தெல்லியூர்த் துர்க்கைக் கலாநிதியே.

நிதியும் கலையும் நிலமும் வளமும் நெகிழ்ந்தபக்தித்
துதியும் சுகமும் சுகத்துக் கியைந்திடு சூழ்நிலையும்
மதியும் கதியுமுன் னோக்கினல் லாதிங்கு வந்திடுமோ
விதியும் பணிந்திடு சிம்மா சனத்துர்க்கை வீரமுத்தே.

முத்தோடு பன்னு மணித்தோ டிலங்க முடிநடுவே
கொத்தோடு கண்ணி யசைவுறச் சந்தனம் குங்குமம்கை
பத்தோடு மேனி பரிமளிக் குந்துர்க்கைப் பான்மொழியே
சித்தோடு நின்றன் பணிசெயக் காட்டுன் திருவிழியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியா லருவி பொழிந்து வருமன்பர் வெய்யவினைச்
சுழியா லுழலா தளித்திடும் துர்க்கைத் தொடுகடலே
மொழியாற் பகரரும் ஞானமின் னேயுன்றன் முன்னடைந்
தால்
வழியாற் றவறுடை யோரையுங் காத்து வழங்கலென்னே.

என்னே, நினதருள், பந்தப், பிறவி யெடுத்தவியான்
அன்னே யெனவழைத் தங்கந் துவள வபயகரம்
முன்னே வழங்குமம் மாதுர்க்கை யேநன் முகுந்தனுக்குத்
தன்னே ரிலாத சகோதரி யேசிவ சாம்பவியே.

சாம்ப சதாசிவன் தந்தநெல் கொண்டு சகமனைத்தும்
வேம்பிணி தீர்த்த திரிபுரை யேமெய் விரதமுற்றித்
தேம்படு வாமப் பெரும்பாதி கொண்ட திகம்பரியே
நாம்படு மேடணை யென்ருெழிப் பாய்மலை நாயகியே.

நாயகி யென்று நமனு மயனும் நவக்கிரகத்
தூயவ ருந்திசைக் காவல ருந்தொழும் துர்க்கையம்மே
ஆயதொண் டர்கணக் குன்கணக் காக்கி யழித்தெழுத
நேய மிகுந்தெல்லி வான்கோ புரக்கோயில் நின்றவளே.

நின்றே னினது நிரைசிலம் பார்கழல் நீதிசொல
நின்றே னினதடி யார்பணி கண்ட நெறியுரைக்க
நின்றே னவவினை வேரறுப் பாயென நேர்நடன
நின்றே னுவந்து பொழிகின்ற துர்க்கை நிரஞ்சனியே.

அஞ்சனம் தேங்கு நயனமும் மூக்கி னணியழகும்
சஞ்சலம் போக்கும் முறுவலும் காக்கும் தனுக்கரமும்
செஞ்சிலம் பார்ந்த திருவடி யுந்தவச் சிந்தனையில்
நெஞ்சகம் காண விருந்தருள் வாய்துர்க்கை நேரிழையே.

நேரிழை யாகி நெடுந்தவம் பூண்டு நிகழ்ந்தலிங்கம்
நீரழி யாது தழுவித் திருத்தனம் நெய்வளைக்கைப்
பேரழ கோங்கப் பொறித்தவ ளேநின் பிறங்குபதத்
தாரழ கோங்கவெம் சென்னிவைப் பாய்துர்க்கைச்
சாந்தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்த நிலைகொளத் தத்துவம் நின்றிடச் சாத்திரநூற்
காந்த விளக்கெழக் கற்றுங் கொழுகிடக் கைலைவெளிப்
போந்த கதிபெறக் காட்டுகென் றுன்னைப் புகலடைந்தேன்
காந்த ளபய வரத கரத்துக் கனித்துர்க்கையே.

துர்க்கையம் மாவருள் வாயென நைந்துனைத் தோத்தரித்
தால்
நற்குண மாண்பும் சிறந்தவில் வாழ்க்கையும் ஞானநன்றிப்
பொற்புயர் மக்களும் போதமும் வீடும் பொழிந்தருள்வாய்
சர்க்கரை பால்பழம் ஊறிய சாறெனச் சார்ந்தவர்க்கே.

சார்ந்து கசிந்து புகழ்பாடிக் கற்று தகையஅன்பு
கூர்ந்து வழிபடு தொண்டருட் கூத்திடுங் கோமளமே
தேர்ந்து பரவுந் திறமறி யேனைச் சினந்துதள்ளா
தோர்ந்து வழுத்த வழிவிடு வாய்துர்க்கை உத்தமியே.

உத்தமி யேயென் னுயிரைவெங் கூற்ற னுறுத்தவந்தால்
சித்திர நாயகச் சிம்மத் திவர்ந்து சிரிப்பரும்ப
முத்திரை காட்டி யஞ்சேலெ னெனவோர் மொழிபுகல்வாய்
அத்தனை நீங்காத் தனியுரு வேதுர்க்கை யஞ்சுகமே.

அஞ்சே னெமனுக்கு மாய கிரக வதிபருக்கும்
செஞ்சே வடிதந் தெனையாண்டு நீகொளிற் றெல்லியிலே
மஞ்சா டிடுங்கோ புரக்கோயின் மேய மகாதுர்க்கையே
துஞ்சா தமன மலர்மீது தோன்றும் சுதந்தரியே.

சுதந்திரம் காண்பவர் நின்னடி சேவிக்கும் தொண்டினரே
விதந்தரு நோயினும் பேயினும் வாடுவர் வெற்றிபுனை
பதந்தரு நின்னைப் பணிந்தறி யாப்பெரும் பாவிகளே
பிதந்தரு வண்ணச் சிவசக்தி யேதுர்க்கைப் பேரழகே.

அழகெலாம் கூடி யணிதிரண் டாலென்ன ஆதியெழில்
வழமையிற் றுங்குதுர்க் காம்பிகை யேநினை வந்துவந்தோர்
சுழலும் சுழுமுனைச் சோதியும் சோதியுட் டோன்றிடுபூங்
கழலும் கழலிற் கதித்தெழு பானுவுங் காணுவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாத காட்சியும் கல்லாத கல்வியும் கள்ளமுள்ளோர்
பூணாத மாலையும் உண்ணாத தில்லைப் புதுப்பழமும்
நாணாத நெஞ்சும் நலியாத வீடும் நயந்தருள்வை
சேணாருந் துர்க்கைப் பராசத்தி யேநினைச் சேர்ந்தவர்க்கே.

சேர்ந்திடு தொண்டர் துயர்கண்டு நின்றன் சிவக்கொழுநன்
கூர்ந்திடு வார்த்தைக் குளிர்வரு வேலை குறையிரந்து
நேர்ந்திடு வாய்த்த வருடருந் தாயென நின்றழுதேன்
சோர்ந்திடு வார்க்குத் துணைதரும் துர்க்கைச்சுடர்விளக்கே.

விளக்கறி யாத மனைக்கே கிடந்து விலங்குகொலைக்
களத்திடை யேங்கு கடாவென நொந்து கலங்குமியான்
உளத்துயர் மாற்றி யொடுக்கிய வாயுவி லுனையறியும்
வளத்தினை யெய்த வருமோதுர்க் காதேவி மாணிக்கமே.

மாணிக்க வாசகன் பிட்டிடும் செல்வி வருத்தமறப்
பாணிக் கிரகணம் பண்ணிய நாதனைப் பாண்டிவைகை
பேணிக் கரைகட்ட விட்டெமக் கேயடிப் பித்தவணி
கோணித் துரத்திடி லாரணைப் பார்துர்க்கைக் கோமதியே.

மதியா துனதுசீர் பேசாத வாயறை, வாழ்விலென்றும்
மிதியா துனது திருக்கோயில் சூழாத வீணரில்லம்,
சதியே புகலும் சழக்கரைப் போற்றுது, தாங்குசிவப்
பொதியே பெறுநிலை தந்திடம் மாதுர்க்கைப் பூரணியே.

பூரண வம்புலி தோன்றிடத் தோடுவான் போதவிட்டாய்
ஆரண காழிக் குழந்தைக்கு ஞான வமுதளித்தாய்
ஊரணி கோபுரக் கோயில்வாழ் துர்க்கை உமையவளே
ஆரணி செய்குவர் நின்னரு ளின்றேல் அடியனையே.

அடியாருறவினுக்காசைகொண்டேனென்றனல்லலெல்லாம்
பொடியாகுமென்றுதிடமடைந்தேனுன்றன்பொன்னருளால்
மடியாத சூர மகிடனை மாய்த்த வயத்துர்க்கையே
மிடியேது மின்றி உலகெலாம் உய்ந்திட வேண்டுவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வேண்டியாங் கெய்துவர் ஆகம வேதநெறி
தூண்டிய சேவை தொடங்கிநின் பாதம் துதித்தவரே
கூண்டடைட குஞ்சுக் குருவியொத் தேனைக் குறையகற்றி
ஆண்டருள் வாய்துர்க்கை யம்மா விடர்க ளகன்றிடவே.

அகன்று மகலாத மும்மல வாசனை யாசறும்நின்
அகன்ற மலரடித் தோத்திர மோதி யடங்கினர்க்கே
புகன்ற மறைக்கு மெட்டாத சோதிப் பொருட்டுர்க்கையே
மகன்ற னறிவுமா தாமதிப் பாயென வந்தனனே.

வந்தேனுன்வாசல், மடுத்தேனுன்தோற்றம்மனமொழிமெய்
தந்தேனுன்றெண்டில்தளர்ந்தேனென்பூசைதகாதெனவே
செந்தேனற் றூமம் செறியலங் காரச் சிவத்துர்க்கையே
நொந்தேனென் வேட்கை நினதுநா தற்கும் நுவலுதியே.

நுவலும் பரத்துக் கதிகாரி யேயுன்ற னூபுரத்திற்
றவழும் இசைநுகர் சால்பருள் வாய்குரு வாய்விசும்பு
திவளும் சிகர மணிக்கோ புரமோங்கும் தெல்லியிலே
சிவமும் விளங்க மிளிர்துர்க்கை யேதமிழ்ச் சீர்தரவே.

## பயன்

கணத்தானைச் செம்பொற் கலத்தானை யங்கைக் கமலமலர்
மணத்தானை வன்சிங்க வாகனத் தானை வழங்குகலைப்
பணத்தானைத்துர்க்கைப்பரையானைத்தெல்லிப்பழையானை
யெண்
குணத்தானைச் சந்ததம் கும்பிடுவார்க்கோர் குறைவிலையே.

## பதம் நினை

பொறைவண்ணத் திருவதனம் பொலிந்து தோன்றும்
புதல்வர்கண பதிமுருகன் பொற்றுள் தோன்றும்
மறைவண்ணத் திருக்கோயில் வடிவம் தோன்றும்
மன்னுகஜ லட்சுமியின் வரங்கள் தோன்றும்
இறைவண்ணத் தேர்தோன்றும் தீர்த்தம் தோன்றும்
இசைவீதி தோன்றுமடி யார்கள் தோன்றும்
நிறவண்ணக் கோபுரமும் சிவமும் தோன்றும்
நெடுந்தெல்லித் துர்க்கைபதம் நினைந்த பேர்க்கே.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — 2625/12-79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org